# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் : 2. 00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: .....

புள்ளிகள் : 100

**பகுதி - III**

* **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

* **01, 02, 03, 04 ஆகிய வினாக்களுக்கும் 05, 06, 07 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**01) சுருக்கமான விடை தருக.**

1) "கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றும் பிற."
அ) மாடு என்பதன் கருத்து யாது?
ஆ) இக்குறட்பாவின் பொருளைத் தருக.

2) அ) நான்மணிக்கடிகை என்ற நூலின் ஆசிரியர் யார்?
ஆ) இந் நூலுக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?

3) "காவியம் எந்த இடத்தில் முடியும், எந்தச் சமயத்தில் முடியும் என்பதை அந்தக் காவியம் தான் தீர்மானிக்க முடியும்" இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது.

4) கலம்பகம் என்றால் என்ன?

5) "ஆழிவாய்ச்சத்தம் அடங்காதோ....." என்ற பாடலில் தலைவி இரவு நீண்டமைக்காகக் கூறும் காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

6) முதுமொழி வெண்பாவில் கூறப்படும் முதுமொழி ஒன்று தருக.

7) "வெய்யிலை அஞ்சி மரத்தடியில் ஒதுங்கும் பெருநிழல் மேல் குளிர்தேடி ஊரும் இளங்காற்று" இவ்வடியில் இடம்பெறும் அணி யாது?

8) பார்வைகள் என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
இக்கதையில் வரும் பிரதான பாத்திரங்கள் எவை?

9) i) தமயந்தி நளனுக்கு மாலை சூட்டிய நிகழ்ச்சி நளவெண்பாவில் எக் காண்டத்தில் இடம்பெற்றுள்ளது.
ii) தமயந்தியின் தந்தை பெயர் யாது?

10) முன்னோக்கு என்ற கவிதையின் மையக்கருத்து யாது? (20 புள்ளிகள்)

**02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

அ) மின்னுந்தார் வீமன்றன் மெய்மரபிற் செம்மை சேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை - **அன்னந்தான்**
**சொன்னவனைச் சூட்ட அருளென்றான் சூழ் விதியின்**
**மன்னவனைத் தன் மனத்தே கொண்டு**

ஆ) மங்கையர் கண் புனல் பொழிய மழைபொழியும் காலம்
மாரவேள் சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகை நகைக்கும் காலம்
**செங்கை முகில் அனைய கொடைச் செம்பொன் பெய் ஏகத்**
**தியாகியெனும் நந்தியருள்** சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம்
அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங்காலம்

இ) இச் சருகுகளை என் தலைமீது எறிந்தீர்கள் அல்லவா? ஆ! உங்களுடைய ஆண்மையை அழிக்கின்றேன்'' என்று சொல்லி, அவர் **தம் பற்களைக் கடித்துப் புருவத்தை நெரித்துக் கோபாவேசத்தோடு அவைகளை உற்று நோக்கவே யோகபலத்தால் அவர் சிரசினின்று அக்கினிச்சுவாலை எழுந்து அப்பக்ஷிகளை சாம்பராக்கிற்று**

ஈ) அறிவுடைய செல்வரை உலகம் போற்றும். அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும் - அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டும் உலகம் களிக்கும் அறிவிலாச் செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும் **அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும் மறுமையில் இன்பமும் எய்துவான்** அறிவிலாச் செல்வன் பயன்படவாழும் பண்பறியாப் பேதையானாய் இம்மையிற் பழியும், மறுமையில் துன்பமும் எய்துவான்.

(20 புள்ளிகள்)

**03)** "நட்சத்திரக் குழந்தைகள்'' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு
அ) கதைக்கரு
ஆ) பாத்திரம் கையாளப்பட்டதன் பொருத்தப்பாடு
இ) கதை உணர்த்தும் படிப்பினைகள்
என்பவற்றை விளக்குக.

**அல்லது**

பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையிலிருந்து
அ) காதலருடைய மனோபாவங்கள்
ஆ) பாரதி இயற்கை மீது கொண்ட ஈடுபாடு
என்பவற்றை ஆராய்க. (15 புள்ளிகள்)

**04)** "நந்திக் கலம்பகம" என்ற சிற்றிலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு

அ) நந்திவர்மனின் கொடை

ஆ) நந்திவர்மனின் வீரம்

இ) தலைவனின் பிரிவுத்துயர்

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

"மங்கையக்கரசியின் காதல்" என்ற சிறுகதையைத் துணைகொண்டு

அ) மங்கையர்க்கரசி கருணாகரன் மீது கொண்ட காதல்

ஆ) சிறுகதை ஆசிரியரான வ. வே. சு ஐயர் கையாண்ட உத்திகள்

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**05, 06, 07 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**05)** ஒரு பதிவிரதையின் சரித்திரம் என்ற கதையின், பதிவிரதையின் குணச்சிறப்பினையும் கதை உணர்த்தும் படிப்பினையும் எடுத்துக் காட்டுக.

**06)** செங்கோன்மை பற்றியும் கொடுங்கோன்மை பற்றியும் வள்ளுவர் கூறிய கருத்தைத் தெளிவாக விளக்குக.

**07)** "நல்லமரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு நல்லார் கைபட்ட செல்வத்தின் இயல்பையும் பேதையர் கைபட்ட செல்வத்தின் இயல்பையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for General Education